NOVEMBER 2017

**60554/CYA4A**

F6

Time : Three hours

Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What do you mean by Accounting Standards?

   கணக்கியல் நேர்த்தி என்பது பற்றி நீ அறிவது யாது?

2. Define — Financial Reporting.

   நிதியியல் அறிக்கை - வரையறு.

3. What is Premium?

   முனைமம் என்றால் என்ன?

4. Reserve for Unexpired Risk — Explain.

   காலாவதியாகாத இடர்பாட்டிற்கான காப்பு- விளக்குக.

5. What is Cash Reserve?

   ரொக்க காப்பு என்றால் என்ன?

6. Define — Contingent Liabilities.

   நிலையில்லா பொறுப்புகள் - வரையறு.

7. What is Amalgamation?

   ஒன்றிணைப்பு என்றால் என்ன?

8. Write a short note on "Net payment method".

   'நிகர செலுத்துகை முறை' பற்றி சிறு குறிப்பு எழுதுக.

9. What do you mean by Liquidation?

   நிறுவன கலைப்பு பற்றி நீ அறிவது யாது?

10. Who is secured creditors?

    பிணைய கடனீந்தோர்கள் என்பவர் யார்?

11. State any two objectives of external reconstruction.

    புற மறுசீர் அமைப்பின் ஏதேனும் இரண்டு நோக்கங்களை தெரிவி.

12. What do you mean by Purchase Consideration?

    கொள்முதல் மறுபயன் பற்றி நீ அறிவது யாது?

II B.Com (CS) - Corporate Accounting II

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. Explain about Current Purchasing Power accounting (CCP).

நடப்பு கொள்முதல் சக்தி கணக்கியல் பற்றி விளக்குக.

14. The Revenue account of Life insurance Company showed the life fund at Rs. 73,17,000 on 31-12-1985 before taking into account the following items.

| SI No | Particulars | Rs. |
|---|---|---|
| (a) | Claims intimated but not admitted | 98,250 |
| (b) | Bonus Utilized in Reduction of premium | 13,500 |
| (c) | Interest accrued on Investment | 29,750 |
| (d) | Outstanding Premiums | 27,000 |
| (e) | Claims Covered under reinsurance | 40,500 |
| (f) | Provision for taxation | 31,500 |

Pass journal entries giving effect to the above adjustments and so the adjusted life fund.

ஆயுள் காப்பீட்டு நிறுமத்தின் வருவாயின கணக்கு பின்வரும் இனங்களை கருத்தில் கொள்வதற்கு முன்பு 31.12.1985 அன்று ரூ. 73,17,000 மாக ஆயுள் நிதி காட்டியது:

| | விபரங்கள் | ரூ. |
|---|---|---|
| (அ) | கோரல் தகவல் பெறப்பட்டதும் ஆனால் ஏற்பு செய்யாததும் | 98,250 |
| (ஆ) | முனைமம் குறைப்பிற்கு வெகுமதி பயன்பாடு | 13,500 |
| (இ) | முதலீட்டின் மீதான வட்டி சேர்ப்பு | 29,750 |
| (ஈ) | முனைமம் கொடுபட வேண்டியது | 27,000 |
| (உ) | மறுகாப்பீட்டின் கீழ் கோரல் சேர்ப்பு | 40,500 |
| (ஊ) | வரிக்கான ஒதுக்கு | 31,500 |

மேலே உள்ள சரிகட்டலுக்கு குறிப்பேட்டு பதிவு தந்து சரிகட்டப்பட்ட ஆயுள் நிதியை கண்டுபிடி.

15. The trial balance of the Nedungadi bank limited as on 30th June 2014 shows the following balances.

| Particulars | Rs. |
|---|---|
| Interest and Discount | 45,40,600 |
| Rebate on bills discounted (1.7.2013) | 4,750 |
| Bills discounted and Purchased | 3,37,400 |

The unexpired discount as on 30-6-2014 is esteemed to be Rs. 5,560. Draft necessary adjusting entries and calculate the amount of interest and discount to be created to profit and loss account.

நெடுங்காடி வங்கி நிறுமத்தின் ஜூன் 30, 2014 வரையிலான இருப்பாய்வில் பின்வரும் இருப்புகள் காட்டியது.

| விபரங்கள் | ரூ. |
|---|---|
| வட்டி மற்றும் தள்ளுபடி | 45,40,600 |
| சீட்டு தள்ளுபடி மீதான ஒதுக்கு (1.7.2013) | 4,750 |
| சீட்டு தள்ளுபடி மற்றும் கொள்முதல் | 3,37,400 |

30.6.2014 அன்று காலாவதியாகாத தள்ளுபடி ரூ. 5,560 என மதிப்பிடப்பட்டது. தேவையான சரிகட்டல் பதிவு தந்து வட்டி தொகை மற்றும் இலாப நட்ட கணக்கில் உருவாக்க வேண்டிய தள்ளுபடியை கணக்கிடுக.

16. The following is the Balance Sheet of G. R. Ltd. as on the date of its acquisition by R.L. Ltd.

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Share capital | 8,00,000 | Goodwill | 2,00,000 |
| General reserve | 2,00,000 | Land & Building | 5,00,000 |
| Creditors | 3,00,000 | Plant & Machinery | 3,00,000 |
| Employees provident fund | 2,00,000 | Stock | 1,00,000 |
| | | Debtors | 1,50,000 |
| | | Cash at bank | 2,50,000 |
| | 15,00,000 | | 15,00,000 |

On the date of its acquisition, goodwill is valued at Rs. 3,00,000, Land and building at Rs. 7,00,000, Plant & Machinery at Rs. 2,00,000 and Stock at Rs. 75,000. All assets and liabilities are taken over. Calculate the amount of purchase consideration.

பின்வருவன G.R. நிறுமத்தின் இருப்பு நிலைக்குறிப்பு ஆகும். இந்த நிறுமம் R.L. நிறுமத்தால் கையகப்படுத்தப்பட்டது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 8,00,000 | நற்பெயர் | 2,00,000 |
| பொதுகாப்பு | 2,00,000 | நிலம் மற்றும் கட்டிடம் | 5,00,000 |
| கடனீந்தோர்கள் | 3,00,000 | பொறி மற்றும் இயந்திரம் | 3,00,000 |
| தொழிலாளர் சேமநல நிதி | 2,00,000 | சரக்கிருப்பு | 1,00,000 |
| | | கடனாளிகள் | 1,50,000 |
| | | வங்கி வச ரொக்கம் | 2,50,000 |
| | 15,00,000 | | 15,00,000 |

அது கைப்பற்றிய தேதியன்று நற்பெயர் ரூ. 3,00,000 எனவும், நிலம் மற்றும் கட்டிடம் ரூ. 7,00,000 எனவும் பொறி மற்றும் இயந்திரம் ரூ. 2,00,000 எனவும் சரக்கிருப்பு ரூ. 75,000 எனவும் மதிப்பிடப்பட்டது. அனைத்து சொத்துகளும் பொறுப்புகளும் எடுத்துக்கொள்ளப்பட்டது. கொள்முதல் மறுபயன் தொகையை கணக்கிடுக.

17. A liquidator is entitled to receive remuneration @ 2 % of the assets realised and 3% on the amount distributed among the unsecured creditors. The assets realised Rs. 70,00,000 against which payment was made as follows :

| | |
|---|---|
| Liquidation expenses | Rs. 50,000 |
| Preferential creditors | Rs. 1,50,000 and |
| Secured creditors | Rs. 40,00,000 |

Calculate the total remuneration payable to the liquidator.

சொத்துக்கள் விற்பனையில் 2% கழிவும் பிணையமற்ற கடனீந்தோர்க்கு வழங்குவதில் 3% கழிவும் கலைப்பாளருக்கு செலுத்த வேண்டும். இந்த சொத்துக்கள் ரூ. 70,00,000-க்கு விற்கப்பட்டு பின்வருமாறு செலுத்துகை செய்யப்பட்டது.

| | |
|---|---|
| கலைப்பு செலவுகள் | ரூ. 50,000 |
| முன்னுரிமை கடனீந்தோர்கள் | ரூ. 1,50,000 மற்றும் |
| பிணைய கடனீந்தோர்கள் | ரூ. 40,00,000 |

கலைப்பாளருக்கு செலுத்த வேண்டிய மொத்த கழிவு தொகையை கணக்கிடுக.

18. Write a detailed note on' Non-banking Assets".

'வங்கிசார சொத்துக்கள்' பற்றி விளக்கமாக எழுதுக.

19. Jeeva Life Assurance Company Ltd. prepared its Revenue A/c for the year ended 31st December 1995 and ascertained its life fund as Rs. 80,00,000. It was found later that the following has been omitted from the books of account.

| | | Rs. |
|---|---|---|
| (a) | Interest accrued on investment | 45,000 |
| (b) | Outstanding premiums | 60,000 |
| (c) | Bonus utilized in reduction of premium | 15,000 |
| (d) | Claims intimated but not yet admitted | 5,000 |
| (e) | Claims covered under reinsurance | 5,000 |

Give entries necessary to rectify the above omissions and ascertain the true life fund.

ஜீவா ஆயுள் காப்பீட்டு நிறுமம் அதன் வருவாயின கணக்கை ஆண்டு இறுதியான டிசம்பர் 31, 1995 வரை தயாரித்து அதன் ஆயுள் நிதி ரூ. 80,00,000 என கண்டுபிடித்தது. பின்வரும் இனங்கள் ஏட்டு கணக்கிலிருந்து விடுபட்டது என பின்னர் கண்டறியப்பட்டது.

| | | ரூ. |
|---|---|---|
| (அ) | முதலீட்டின் மீதான வட்டி சேர்ப்பு | 45,000 |
| (ஆ) | முனைமம் கொடுபட வேண்டியது | 60,000 |
| (இ) | முனைம குறைப்பில் வெகுமதி பயன்பாடு | 15,000 |
| (ஈ) | கோரல் தக்வல் பெறப்பட்டது. ஆனால் ஏற்பு இன்னும் செய்யவில்லை | 5,000 |
| (உ) | மறு காப்பீட்டின் கீழ் கோரல் | 5,000 |

மேலே விடுப்பட்டவைக்கு தேவையான மாற்று பதிவு தந்து உண்மையான ஆயுள் நிதி கண்டுபிடிக்கவும்.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. What are the limitations of historical accounting?

வரலாறு கணக்கியலின் வரையறைகள் யாவை?

21. The following balances are abstracted from the books of new Bharat life insurance corporation, as on 31.12.1998.

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Life Assurance Fund (1.1.98) | 15,00,000 | Claims paid during the year | 64,900 |
| Premiums | 4,96,000 | Annuities | 2,050 |
| Consideration for annuities granted | 15,000 | Bonus in reduction of premiums | 1,600 |
| | | Medical fees | 2,400 |
| Interest on investments | 1,00,000 | Surrenders | 4,000 |
| Finance for Revival of policies | 750 | Commission | 18,650 |
| Reinsurance premium | 20,750 | Management expenses | 22,000 |
| Claims outstanding (1.1.98) | 4,500 | Income tax on dividends | 8,500 |

Prepare revenue account after making the following adjustments.

(a) Out standing balances — Rs.

(i) Claims — 14,000

(ii) Premiums — 4,600

(b) Further bonus for premium — 2,400

(c) Claim under reinsurance — 8,000

பின்வரும் இருப்புகள் பாரத் ஆயுள் காப்பீட்டு கழகத்தின் 31.12.1998 வரையானது ஆகும்.

| விபரங்கள் | ரூ. | விபரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| ஆயுள் காப்பீட்டு நிதி (1.1.98) | 15,00,000 | நடப்பு ஆண்டு கோரல் செலுத்தியது | 64,900 |
| முனைமம் | 4,96,000 | ஆண்டு தொகை | 2,050 |
| ஆண்டு தொகைக்கான மறுபயன் | 15,000 | முனைம குறைப்பில் வெகுமதி | 1,600 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,00,000 | மருத்துவ கட்டணம் | 2,400 |
| திட்ட மீட்புக்கான நிதியியல் | 750 | ஒப்படைவுகள் | 4,000 |
| மறுகாப்பீட்டு முனைமம் | 20,750 | கழிவு | 18,650 |
| கொடுபட வேண்டிய கோரல் (1.1.98) | 4,500 | மேலாண்மை செலவுகள் | 22,000 |
| | | பங்காதயத்தின் மீதான வருமான வரி | 8,500 |

பின்வரும் சரிகட்டல்களை உருவாக்கிய பின்னர் வருவாயின கணக்கு தயாரிக்கவும்.

| | | ரூ. |
|---|---|---|
| (அ) | கொடுபட வேண்டிய இருப்புகள் | |
| | (i) கோரல்கள் | 14,000 |
| | (ii) முனைமம் | 4,600 |
| (ஆ) | முனைமத்திற்கான தொடர் வெகுமதி | 2,400 |
| (இ) | மறுகாப்பீட்டிற்கு கீழ் கோரல் | 8,000 |

22. From the following information relating to Lakshmi Bank Ltd, prepare the profit and loss account the year ended 31st December 2016.

| Particulars | Rs. | Particulars | Rs. |
|---|---|---|---|
| Rent received | 72,000 | Salaries and allowance | 2,18,800 |
| Exchange and commission | 32,800 | Postage expenses | 5,600 |
| Interest on fixed deposit | 11,00,000 | Sundry charges | 4,000 |
| Interest on SB accounts | 2,72,000 | Directors and Auditor's fees | 16,800 |
| Interest on Overdrafts | 2,16,000 | Printing expenses | 8,000 |
| Discount on bills discounted | 7,80,000 | Law charges | 3,600 |
| Interest on current accounts | 1,68,000 | Locker rent | 1,400 |
| Interest on cash credits | 8,92,000 | Transfer fees | 2,800 |
| Depreciation bank property | 20,000 | Interest on loans | 10,36,000 |

பின்வரும் தகவல்கள் இலட்சுமி வங்கி நிறுமத்திற்குரியது. இதிலிருந்து டிசம்பர் 31, 2016 வரையான இலாப மற்றும் நட்ட கணக்கு தயார் செய்யவும்.

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| வாடகை பெற்றது | 72,000 | ஊதியம் மற்றும் படி | 2,18,800 |
| மாற்றுதல் மற்றும் கழிவு | 32,800 | தபால் செலவுகள் | 5,600 |
| நிலை வைப்பு மீதான வட்டி | 11,00,000 | பற்பல செலவுகள் | 4,000 |
| சேமிப்பு கணக்கு மீதான வட்டி | 2,72,000 | இயக்குநர்கள் மற்றும் | |
| மேல்வரைபற்று மீதான வட்டி | 2,16,000 | தணிக்கையர் கட்டணம் | 16,800 |
| மாற்று சீட்டு தள்ளுபடி மீதான | | அச்சக செலவுகள் | 8,000 |
| வட்ட ஒதுக்கு | 7,80,000 | சட்ட செலவு | 3,600 |
| நடப்பு கணக்கு மீதான வட்டி | 1,68,000 | பெட்டக வாடகை | 1,400 |
| ரொக்க கடன் மீதான வட்டி | 8,92,000 | மாற்றல் கட்டணம் | 2,800 |
| வங்கி சொத்து தேய்மானம் | 20,000 | கடன்கள் மீதான வட்டி | 10,36,000 |

23. M Ltd. and N Ltd. agreed to amalgamate on the basis of the following balance sheet as on 31.3.1997.

| Liabilities | M Rs. | N Rs. | Assets | M Rs. | N Rs. |
|---|---|---|---|---|---|
| Share capital | | | Goodwill | 30,000 | - |
| Rs. 25 each | 75,000 | 50,000 | Fixed assets | 31,500 | 38,800 |
| P & L A/c | 7,500 | 2,500 | Stock | 15,000 | 12,000 |
| Creditors | 3,500 | 3,500 | Debtors | 8,000 | 5,200 |
| Depreciation Fund | - | 2,500 | Bank | 1,500 | 2,500 |
| | 86,000 | 58,500 | | 86,000 | 58,500 |

The assets and liabilities are to be taken over by a new company formed called P Ltd at book values. P Ltd's capital is Rs. 2,00,000 divided into 10,000 equity shares of Rs. 10 each and 10,000, 9% preference shares of Rs. 10 each. P Ltd issued, the equity shares equally to the vendor companies and preference shares were issued for any balance of purchase price. Pass journal entries in the books of P Ltd. and prepare its balance Sheet.

M நிறுமம் மற்றும் N நிறுமம் ஒருங்கிணைப்பு செய்து கொள்ள 31.03.97 வரையான இருப்பு நிலைக்குறிப்பை அடிப்படையாக கொண்டுள்ளது.

| பொறுப்புகள் | M ரூ. | N ரூ. | சொத்துகள் | M ரூ. | N ரூ. |
|---|---|---|---|---|---|
| பங்கு முதல் | | | நற்பெயர் | 30,000 | - |
| ரூ. 25 வீதம் | 75,000 | 50,000 | நிலை சொத்துகள் | 31,500 | 38,800 |
| இலா & ந க/கு | 7,500 | 2,500 | சரக்கிருப்பு | 15,000 | 12,000 |
| கடனீந்தோர்கள் | 3,500 | 3,500 | கடனாளிகள் | 8,000 | 5,200 |
| தேய்மான நிதி | - | 2,500 | வங்கி | 1,500 | 2,500 |
| | 86,000 | 58,500 | | 86,000 | 58,500 |

இந்த சொத்துகளும் பொறுப்புகளும் புதியதாக நிறுவப்பட்ட P நிறுமம் ஏட்டு மதிப்பில் எடுத்துக் கொண்டது. P நிறுமத்தின் மூலதனம் ரூ. 2,00,000-த்தை 10,000 சமநிலைப் பங்குகளை ரூ. 10 வீதமும் 10,000, 9% முன்னுரிமைப் பங்குகளாகவும் ரூ. 10 வீதம் P நிறுமம் கொண்டுள்ளது. இந்த சமநிலைப் பங்குகளை விற்பனை நிறுமங்களுக்கு சமமாக கொடுக்கப்பட்டது. கொள்முதல் விலையில் பற்றாக்குறை இருப்பின் முன்னுரிமை பங்குகள் கொடுக்கப்படும். P நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டு பதிவு தந்து அதன் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

24. The company went into voluntary liquidation on 31-3-1998 when the following balance was prepared.

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Authorized capital : | | Goodwill | 6,960 |
| 4000 shares of Rs. 10 each | 40,000 | Freehold property | 5,000 |
| Issued capital : | | Machinery | 7,480 |
| 3000 shares of Rs. 10 each | 30,000 | Stock | 11,710 |
| Unsecured creditors | 15,432 | Debtors | 9,244 |
| Partly secured creditors | 5,836 | Cash | 100 |
| Preferential creditors | 810 | Profit and loss a/c | 11,816 |
| Bank overdraft (unsecured) | 232 | | |
| | 52,310 | | 52,310 |

The Liquidator's realized the assets as follows :

Freehold property which was used in the first instance to pay the partly secured creditors pro-rata Rs. 3,600. Machinery Rs. 5,000, Stock Rs. 6,200, Debtors Rs. 8,700, Cash Rs. 100

The expenses of liquidation amounted to Rs. 100 and Liquidator's Remuneration was agreed at 2.5% on the amount realized including cash and 2% on the amount paid to unsecured creditors. Prepare the Liquidator's final statement of Accounts.

பின்வரும் இருப்பு நிலைக்குறிப்பு 31.3.1998 அன்று ஒரு நிறுமம் தன்விருப்பு கலைப்புக்குள்ளான போது தயாரிக்கப்பட்டது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் : | | நற்பெயர் | 6,960 |
| 4000 பங்குகள் ரூ. 10 வீதம் | 40,000 | வில்லங்கமில்லா சொத்துகள் | 5,000 |
| வெளியீட்டு மூலதனம் : | | இயந்திரம் | 7,480 |
| 3000 பங்குகள் ரூ. 10 வீதம் | 30,000 | சரக்கிருப்பு | 11,710 |
| பிணையமற்ற கடனீந்தோர்கள் | 15,432 | கடனாளிகள் | 9,244 |
| பகுதி பிணைய கடனீந்தோர்கள் | 5,836 | ரொக்கம் | 100 |
| முன்னுரிமை கடனீந்தோர்கள் | 810 | இலாப நட்ட க/கு | 11,816 |
| வங்கிவரைப் பற்று (பிணையமற்று) | 232 | | |
| | 52,310 | | 52,310 |

கலைப்பாளரால் பின்வரும் சொத்துகள் தீர்வு செய்யப்பட்டது.

பகுதி பிணைய கடனீந்தோர்களுக்கு விகிதாசார அடிப்படையில் வில்லங்கமில்லா சொத்துக்கள் ரூ. 3,600 க்கும், இயந்திரம் ரூ. 5,000க்கும் சரக்கிருப்பு ரூ.6,200 க்கும் கடனாளிகள் ரூ. 8,700 க்கும் ரொக்கம் ரூ. 100 கிடைக்க பெற்றன.

கலைப்புக்கான செலவு தொகை ரூ. 100 மற்றும் கலைப்பாளர் ஊதியமாக சொத்துக்கள் தீர்வு செய்யப்பட்டதில் (ரொக்கம் உட்பட) 2.5% தொகையும் பிணையமற்ற கடனீந்தோருக்கு செலுத்துவதில் 2% அளிக்கப்பட வேண்டும். கலைப்பாளரின் இறுதி கணக்கு அறிக்கை தயார் செய்யவும்.